அமைப்பதற்கு 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. திட்ட மதிப்பீடு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளவாறு சொந்தக் கட்டடம் கட்ட, நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

வீட்டுமனைப் பட்டா

*****22511**—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, எல்லப்புடையாம்பட்டி ஊராட்சி, கொளப்பாரை கிராமத்திலுள்ள அருந்ததியர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.*

2013 மே 2]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கொளப்பாரை கிராமத்திலே அருந்ததியின மக்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களது குடியிருப்பைச் சுற்றியுள்ள நிலங்கள் முழுவதும், விவசாய நிலங்களாக இருப்பதால், நேரடி பேச்சுவார்த்தைமூலம் கிரையம் கொடுக்க யாரும் முன்வராத காரணத்தினால், கட்டாய நில எடுப்பு மேற்கொண்டால் மட்டுமே வீட்டுமனைப் பட்டா வழங்க இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை ஆர்.டி.ஓ., திரு. மலையாளம் அவர்களைச் சந்தித்தேன். ஒரே நாளில் 1,392 மனுக்கள் பெறப்பட்டதாகவும், அதில் 50 சதவிகித மனுக்களுக்கு அங்கேயே தீர்வு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்தகைய சிறப்பான 'அம்மா' திட்டம் தமிழகத்தில் நடைபெற்று வருகின்ற சூழ்நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) அரூர் தொகுதியில் 50 ஆண்டுகாலமாக, 50 சென்ட் நிலத்தில் 72 குடும்பங்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். பல முறை விண்ணப்பித்தும் இதுவரை அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. ஒரே குடும்பத்தில், அடுக்கிய மூட்டைகளில் அடி மூட்டை என்று சொல்வார்களே, அதுபோல அருந்ததியின சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு வீட்டில் 2 குடும்பங்கள், 3 குடும்பங்கள் வாழவேண்டிய நிலைமை 50 ஆண்டுகாலமாக நீடித்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அவர்களது குடியிருப்பைச் சுற்றி விவசாய நிலங்கள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், உயர்ந்த ஜாதி சமூகத்தினருடைய நிலங்கள் இருக்கின்றன. இவர்களுடைய வீடுகளைச் சுற்றி முள்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய பெண்கள் மலம் கழிப்பதற்குக்கூட 1 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஏற்கெனவே கடந்த ஆண்டு நான் முயற்சி செய்து வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள்

நிலத்தைக் கையகப்படுத்தி, பட்டா கொடுக்கிற நேரத்தில் நிறுத்திவிட்டார்கள். ஏனென்று கேட்டால், உயர்ந்த ஜாதி சமூகத்தினர் குடியிருக்கக்கூடிய பகுதியில், அவர்களுடைய ஊருக்கு மேல் பகுதியில் அருந்ததியின மக்கள் குடியேறக் கூடாது என்று நிறுத்திவிட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, அங்கேயிருக்கக்கூடிய அரசு புறம்போக்கு நிலங்களிலோ, தரிசு தீர்வு ஏற்பட்ட நிலங்களிலோ அல்லது பல்வேறுபட்ட புறம்போக்கு நிலங்களிலோ எல்லப்புடையாம்பட்டி பகுதியில் வாழும் கொளப்பாறை அருந்ததியின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 'அம்மா' திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பாராட்டிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு மட்டுமல்ல, தலைநகர் டில்லியே வியந்து பாராட்டுகிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் இந்தியா முழுவதும் விரிவுபடுத்தப்படுகிற காலம் விரைவில் வரத்தான் போகிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்திற்கு உட்பட்ட கொளப்பாரை கிராமத்திலே சுமார் 0.36 ஹெக்டேர் பரப்பளவு நிலத்திலே 50 அருந்ததியின மக்கள் கூட்டுக் குடும்பமாக நீண்டகாலமாக வசித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த நிலம் அய்யாதுரையினுடைய மக்கள் நடேசன் என்பவருக்கும், பெருமாள் என்பவருக்கும் அவர்களுடைய தனிப் பெயர்களில் கூட்டுப் பட்டாவாக வருவாய்த் துறை ஆவணத்தில் பதிவாகியிருக்கிற காரணத்தினாலே, அந்த நிலத்தை நேரடி பேச்சுவார்த்தை மூலம்தான் நில எடுப்பு செய்து, அங்கு வாழ்ந்து வரக்கூடிய அருந்ததியின மக்களுக்குப் பட்டா வழங்க இயலும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நேரடி பேச்சுவார்த்தைமூலமாக நில எடுப்பு செய்வதற்கு, சம்பந்தப்பட்ட பட்டாதாரர்கள் முன்வராத காரணத்தினால்,

2013 மே 2]

ஆதி திராவிட நலத் துறை, நில எடுப்புச் சட்டத்தின் மூலமாக கட்டாய நில எடுப்பு செய்து, அதைக் கையகப்படுத்தி, ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக உரிய தொகையை அவர்களுக்குச் செலுத்தி, அதன் பின்னர் பட்டா வழங்க வேண்டுமென்கிற ஒரு நிலை இருக்கிறது. 2013-2014 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னாலே நிலத்தைக் கையகப்படுத்தி ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக நீண்டகாலமாகக் குடியிருந்து வரக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 2,53,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, ஒரு சாதனை அரசாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் ஒரே வீட்டில் 2, 3 குடும்பங்கள் வாழ வேண்டிய நிலை இருப்பதாகவும் அவர்களுக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே வருவாய்த் துறை மூலமாக அப்படி ஒரே வீட்டில் 2, 3 குடும்பங்கள் சேர்ந்து வசித்தால் அவர்களுக்கும் வருவாய்த் துறை மூலமாக பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கை மிக விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அறிந்தவரை, இதுவரை தமிழகத்திலே 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் 2,53,000 மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது நல்ல விஷயம், வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். இதில் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்களுக்கு எத்தனை ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே இதுவரை எத்தனை வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? இந்த விவரங்களோடு, தமிழகம் முழுவதும், இனி வருங்காலத்தில், வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு எத்தனை நாட்களில் பட்டா வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற எதிர்கால யோசனையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கப்படும் என்று சொன்னாலும்கூட, கடந்த வருடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல ஆட்சியிலே 1,26,000 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மட்டும், இலக்கு ஒரு இலட்சம், ஆனால், 1,36,000 பட்டாக்களை வழங்கி, இந்த அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற தருமபுரி மாவட்டத்திலே மட்டும், கடந்த 2011-2012 ஆம் ஆண்டு, 4,000 பட்டாக்கள் வழங்கப்படும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 3,766 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள அரூர் வட்டத்தில் மட்டும் 560 பட்டாக்கள்

2013 மே 2]

வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, 282 பட்டாக்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே மட்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மலைவாழ் மக்களுக்கு 42 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திலே 2012-2013 ஆம் ஆண்டு 4,500 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4,382 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள அரூர் வட்டத்திலே மட்டும் 935 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 1,20,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய பகுதியிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களுக்கு மிக விரைவில் பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை வருவாய்த் துறை மூலமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

378—

கூடுதல் கட்டடம்

***27800—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—